# உச்ச நீதி மன்றத்தின்

# பிரிவு 377 தீர்ப்பை எதிர்த்து உலகளாவிய எழுச்சி தினம்




---

**Media Release:** For Immediate Release in Chennai
பத்திரிகையாளர்கள் சந்திப்பு: ஞாயிறு 15, டிசம்பர் 3 மணி முதல் 4 மணி வரை

இன்று சென்னை மற்றும் உலகெங்கிலும் 36 நகரங்கள், இந்திய உச்ச நீதி மன்றம் டிசம்பர் 11 அன்று வழங்கிய பிரிவு 377 தீர்ப்பை எதிர்த்து, "உலகளாவிய எழுச்சி தின"த்தை அனுசரிக்கின்றன.

பாலியல் சிறுபான்மையினர்களின் முழு குடியுரிமையை அங்கீகரித்த, தில்லி உயர் நீதி மன்றத்தின் வரலாற்று சிறப்புமிக்கத் தீர்ப்பை அழித்து, உச்ச நீதிமன்றம் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டிருக்கிறது. ஒரே வரியில், இந்தத் தீர்ப்பு, பாலியல் சிறுபான்மையினர்களுக்கு, தில்லி உயர்நீதி மன்றம் குறிப்பிட்டது போல, "பிடிக்கப்படாத குற்றவாளிகள்" என்ற அந்தஸ்த்தைக் கொடுத்திருக்கிறது. இந்தத் தீர்ப்பு, பாலியல் சிறுபான்மையினர்களின் கண்ணியத்திற்கும், சமத்துவத்திற்கும் எதிரான ஒரு மிகப் பெரிய அடி என்றால் அது மிகையாகாது. அனைத்து குடிமக்களுக்கும் உத்தரவாதமான, இந்திய அரசியல் சாசனத்தின் பாதுகாப்பு கரங்களை, இந்தத் தீர்ப்பு பாலின சிறுபான்மையினரின் மேலிருந்து நீக்கி, அவர்கள் பாகுபாடு, வதை, வன்முறை போன்ற பல துன்பங்களுக்கு ஆளாகுகிற சூழ்நிலையை உருவாக்கி தந்துள்ளது.

தில்லி உயர் நீதி மன்றம் தன் தீர்ப்பில் மிக அழகாக விவரித்த, நம் அரசியல் சாசன அமைப்பாளர்களின் அடிப்படைக் கருத்துக்களை, உச்ச நீதி மன்றம் உதாசீனப் படுத்தியிருப்பது மிகுந்த வருத்தத்திற்கு உரிய விஷயம். பாலியல் சிறுபான்மையினரை மீண்டும் குற்றவாளிகளாக மாற்றிய இந்தத் தீர்ப்பின் மூலம், நமது அரசியல் சாசனத்தின் அடிப்படை என்று ஜவஹர்லால் நேரு விவரித்த, சகோதரத்துத்தை, உச்ச நீதி மன்றம் உருக்குலைத்து விட்டது. அதுமட்டுமில்லாது, பெரும்பான்மை என்ற ஒரே காரணத்தால், பெரும்பான்மையினர், சிறுபான்மையினரை வேற்றுமைப்படுத்த முடியாது, என்று டாக்டர் அம்பேத்கார் விவரித்த, நம் அரசியல சாசன தருமத்தை, புறக்கணித்திருக்கிறது இந்தத் தீர்ப்பு.

எல்லாக் குடிமக்களின் அடிப்படை கண்ணியமும், சுதந்திரமும் சமம் எனவும், சமவுரிமை என்பது பேரம்பேசிப் பெறவேண்டிய விஷயம் அல்ல, நமது பிறப்புரிமை, எனவும் உறுதி செய்த, உலகின் மிகப்

பெரிய குடியாட்ச்சியான நம் நாட்டின், அரசியல் சாசனத்திற்கு, இந்தத் தீர்ப்பு நம்பிக்கை துரோகம் செய்திருக்கிறது என்றால் அது பொய்யல்ல. இந்தத் தீர்ப்பின் மூலம் எந்த அரசியல் சாசன நீதியை பாதுகாக்க உச்ச நீதி மன்றம் பொறுப்பு ஏற்றதோ, அதே நீதியை அது சுக்குநூறாகக் கிழித்து எரிந்திருக்கிறது என்றால், அதுவும் மிகையல்ல.

1975 ல் அவசர நிலையை அங்கீகரித்ததும், 1979 ல் (மதுரா வழக்கில்) பாலியல் பலாத்காரத்தை நியாப்பதுத்தியதும், பெருமை வாய்ந்த இந்த நீதி மன்றத்தின் வரலாற்றின் மீது படிந்திருக்கும், அழிக்க முடியாத கரைகள். அந்த வரிசையில் டிசம்பர் 11, 2013 அன்று வழங்கிய இந்தத் தீர்ப்பும் இடம்பெறும். காலாவதியான, ஒரு ஆங்கிலேய சட்டத்தை நிலைநிறுத்தியதன் மூலம், இந்தத் தீர்ப்பு, பாலியல் சிறுபான்மையினரின் அடிப்படை கண்ணியத்தையும், உரிமைகளையும் களைந்திருக்கிறது.

எதிர்காலம் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், பாலியல் சிறுபான்மையினர்கள் இந்தத் தீர்ப்பை, தங்கள் தினசரி வாழ்க்கையில் தாக்கம் ஏற்படுத்த அனுமதிக்க மாட்டார்கள், என்கிற நம்பிக்கையில், நாம் உத்வேகமும், சக்தியும் பெறுகிறோம். கடந்த பத்து ஆண்டுகளில், இந்தியாவில், பாலின சிறுபான்மையினர்கள் தங்கள் வாழ்க்கைகளை ஒளிவு மறைவின்றி, சுதந்திரமாக வாழத் துவங்கி இருக்கிறார்கள். தாங்களும் சம உரிமைகள் கொண்ட குடிமக்கள் என்பதை நிலைநிறுத்தி வருகிறார்கள். சரித்திரத்தின் பக்கம் திரும்பி விட்டது! இதை உலகில் எந்த சக்தியாலும் திரும்பி பழைய நிலைக்குத் தள்ள முடியாது என்பது உறுதி.

இந்தத் தீர்ப்பினை உடனடியாக திரும்பிப் பெறுமாறு உச்ச நீதி மன்றத்தைக் கேட்டுக் கொள்கிறோம். மாநில அளவில் 377 பிரிவில் சட்ட திருத்தம் கொண்டுவந்து, 18 வயதிற்கு மேல் உள்ள இருவரின் பரஸ்பர சமதத்துடன் தனிமையில் நடக்கும் எந்த பால் சம்மந்தமான உறவையும், குற்றமாக்காமல் தடுக்க வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம். இன்று இருக்கும் நிலையில், இந்த சட்டத்தை, அமைதி விரும்பும் குடிமக்களின் மீது பயன்படுத்தக் கூடாது, என்றும், டைரக்டர் ஜெனரல் ஆப் போலீசைக் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, Chennai Rainbow Coalition

**மேலும் விவரங்களுக்கு/ Media contacts:**

Jaya 98418-65423 (Tamil), Taejha 91760-16919 (English/Tamil) Rupesh 95516-30213 (English/Tamil)
Sunil Menon 93810-16129 (English) Ramakrishnan 98415-57983 (English)

---

PROTESTS AGAINST SUPREME COURT 377 VERDICT IN INDIA
Ahmedabad ⌘ Bangalore ⌘ Bhopal ⌘ Chennai ⌘ Delhi ⌘ Guwahati ⌘ Hyderabad ⌘ Kolkata ⌘ Lucknow ⌘ Mangalore ⌘ Mumbai ⌘ Mysore ⌘ Nagpur ⌘ Pune ⌘ Sangli ⌘ Thrissur ⌘ West Imphal

PROTESTS AGAINST SUPREME COURT 377 VERDICT OUTSIDE INDIA
AUSTRALIA: Sydney ⌘ CANADA: Montreal, Toronto, Vancouver ⌘ GERMANY: Berlin, Hamburg ⌘ UK: Cambridge, London ⌘ USA: Ann Arbor, Artesia, Boston, Houston, Ithaca, New York, Philadephia, Richmond, San Francisco, Washington DC

**Website for more information - [http://377.orinam.net](http://377.orinam.net)**

# Global Day of Rage against Supreme Court verdict on Section 377




---

MEDIA RELEASE - FOR IMMEDIATE RELEASE IN CHENNAI
Press Conference: Sun Dec 15, 2013: 3-4 pm

Today Chennai joins nearly 36 cities in India and around the world to observe the Global Day of Rage and condemn the Supreme Court verdict that was announced on Dec 11.

By overturning the Delhi High Court's 2009 Naz Foundation judgment, the Supreme Court has, in one fell stroke again reduced LGBT persons to the status of what the Delhi High Court memorably called 'unapprehended felons'. The judgment of the Supreme Court is a unconscionable blow to the dignity of LGBT persons who as per the Indian Constitution are entitled to equal treatment. It withdraws the protective arm of the constitution from LGBT persons and renders LGBT persons vulnerable to discrimination, violence and harassment.

It is a tragedy that this judgment forgets the vision of the founders of the Indian republic which was so eloquently captured by the Delhi High Court. By re-criminalizing LGBT persons the judgment ignores the spirit of inclusiveness which is the heart of the Indian Constitution as articulated by Jawaharlal Nehru. It equally abandons the principle of constitutional morality (ie majorities dont have a charter to discriminate against minorities purely because they are majorities) articulated by Dr. Ambedkar which is the cornerstone of a diverse and plural nation.

The judgment is thus a deep betrayal of the fundamental constitutional promise that the dignity of all citizens would be recognized and that equal treatment is a non negotiable element of the world's largest democracy. In this betrayal of constitutional faith, the Court has shredded the very principles it has sworn itself to uphold.

This decision on Dec 11, 2013 along with the decisions upholding the emergency (1975) and legitimizing rape (1979 Mathura case) marks the lowest ebb in the illustrious history of the

Supreme Court. Through the current ruling, the Supreme Court has upheld an outdated colonial law, and reduced the dignity and rights of sexual and gender minorities.

Hard as this decision is and difficult as the road forward may be, we draw strength and inspiration from ordinary LGBT persons who will not allow this to affect the way they lead their lives. In the course of the last ten years or so, LGBT persons have begun to lead their lives openly and publicly proclaiming their claim to equal citizenship. The page of history has turned and no power on earth can deny LGBT persons the right to freedom, equality and dignity.

We are tremendously encouraged by the support the LGBT community has received from India's Law Minister, Attorney General, Additional Solicitor General, Finance Minister, Health Ministry, Congress, AAP, as well as from our families, friends and many sections of the mainstream media.

We strongly urge the Supreme Court to reverse its decision. At the state level, we ask the Tamil Nadu government to amend Section 377 so that it does not criminalize adult consensual relationships. We also ask the Director General of Police to ensure that the law, as it now stands, is not used to harass peaceful citizens in the state.

Organized by the Chennai Rainbow Coalition

Contacts
Jaya 98418-65423 (Tamil),
Taejha 91760-16919 (English/Tamil)
Sunil Menon 93810-16129 (English)
Rupesh 95516-30213 (English/Tamil)
Ramakrishnan 98415-57983 (English)

---

**PROTESTS AGAINST SUPREME COURT 377 VERDICT IN INDIA**

Ahmedabad ⌘ Bangalore ⌘ Bhopal ⌘ Chennai ⌘ Delhi ⌘ Guwahati ⌘ Hyderabad ⌘ Kolkata ⌘ Lucknow ⌘ Mangalore ⌘ Mumbai ⌘ Mysore ⌘ Nagpur ⌘ Pune ⌘ Sangli ⌘ Thrissur ⌘ West Imphal

**PROTESTS AGAINST SUPREME COURT 377 VERDICT OUTSIDE INDIA**

AUSTRALIA: Sydney ⌘ CANADA: Montreal, Toronto, Vancouver ⌘ GERMANY: Berlin, Hamburg ⌘ UK: Cambridge, London ⌘ USA: Ann Arbor, Artesia, Boston, Houston, Ithaca, New York, Philadephia, Richmond, San Francisco, Washington DC

**Website for more information - http://377.orinam.net**